சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை :- **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.நி.ம.எண்.01/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.36/2020**

1. சாரங்கபாணி
2. சம்பத்
3. விசாலாட்சி
4. அம்பிகா
5. யசோதா
6. அங்கமுத்து
7. குமரேசன்

.... மனுதாரர்கள்/1,3 முதல்6,8,9 பிரதிவாதிகள்

**// எதிராக //**

கற்பகம் .... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 27.01.2026 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்கள்/ 1,3 முதல்6,8,9 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.சக்திவேல்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.சிற்றரசு,எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மேற்படி தாவாவில் மனுதாரர்கள்/1,3 முதல்6,8,9 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஏற்று குறியீடு செய்துகொள்ள தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.30 17:05:47 +0530

2. **<u>மனுதாரர்கள்/1,3 முதல்6,8,9 பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்: -</u>**

(i) மேற்படி மனுவில் தான் மனுதாரர் ஆவேன் என்றும், தாவாவில் 1-ம் பிரதிவாதி மற்ற 3 முதல் 6,8,9 பிரதிவாதிகளுக்காகவும் இந்த அபிடவிட்டை தாக்கல் செய்கிறேன் என்றும், மேற்படி தாவா இன்று தங்களது தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தங்களது தரப்பில் வழக்கிற்கு பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பதிலுரையில் கூறியுள்ள ஆவணங்கள் தற்போது தன் கைக்கு கிடைத்துள்ளது என்றும், அந்த ஆவணங்கள் மேற்படி வழக்கிற்கு தேவையான முக்கியமான ஆவணங்கள் ஆகும் என்றும், ஆதலால் மேற்படி ஆவணங்களை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தங்களது தரப்பில் குறியீடு செய்தால்தான் தனக்கு தாவாவில் சரியான தீர்ப்பினை பெற இயலும் என்றும், இல்லாவிடில் தனக்கு பெருத்த கஷ்டநஷ்டம் பேரிழப்பும் ஏற்படும் என்றும், ஆகவே கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி தாவாவில் தனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்று குறியீடு செய்துகொள்ள தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுவது மிகவும் அவசியமும் நியாயமுமாய் உள்ளது என்றும் மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ளார்.

3. **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் : -</u>**

(i) மனுதாரரின் மனு பொய், மோசம், சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, தள்ளுண்டு போகத்தக்கது. மனு அபிடவிட் சங்கதியில் மேற்படி தாவா இன்று மனுதாரர்கள்/1, 3 முதல் 6, 8, 9 பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்பது உண்மை. மனுதாரர்கள்/1, 3 முதல் 6, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கிற்கு பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது உண்மை. பதிலுரையில்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.30 17:05:50 +0530

கூறியுள்ள ஆவணங்கள் தற்போது மனுதாரர்கள்/1, 3 முதல் 6, 8, 9 பிரதிவாதிகள் கைக்கு கிடைத்துள்ளது என்பது தவறு. அந்த ஆவணங்கள் மேற்படி வழக்கிற்கு தேவையான முக்கியமான ஆவணங்கள் ஆகும் என்பது தவறு. ஆதலால் மேற்படி ஆவணங்களை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து மனுதாரர்கள்/1, 3 முதல் 6, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்தால் தான் மனுதாரர்கள்/1, 3 முதல் 6, 8, 9 பிரதிவாதிகள் தாவாவில் சரியான தீர்ப்பினை பெற இயலும் என்பதும் இல்லாவிடில் மனுதாரர்கள்/1, 3 முதல் 6, 8, 9 பிரதிவாதிகளுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் பேரிழப்பும் ஏற்படும் என்பதும் தவறு.

(ii) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்மனுதாரர்/வாதிக்கு உரிய பரிகாரம் கிடைக்ககூடாது என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களாகும். மேற்படி ஆவணங்கள் குறித்து எதிர்மனுதாரர்/வாதி தாவாவில் குறிப்பிட்டுள்ளார். மனுவில் கண்ட ஆவணங்கள் வழக்கிற்கு அவசியமில்லாத ஆவணங்கள் ஆகும். எனவே மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஆகையால் கனம் கோர்ட்டார் அவர்கள் மேற்படி மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

<u>**தீர்வு**</u> :-

**5.** மேற்படி தாவாவில் மனுதாரர்கள்/1,3 முதல்6,8,9 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஏற்று குறியீடு செய்துகொள்ள தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.30 17:05:54 +0530

**6.** மனுதாரர்கள்/1,3 முதல்6,8,9 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். எதிர்மனுதாரர்/வாதி எதிருரையில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, பிரமாண வாக்குமூலம், பதிலுரை, வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள்/1,3 முதல்6,8,9 பிரதிவாதிகள் தான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், மேற்படி மனுவில் தான் மனுதாரர் ஆவேன் என்றும், தாவாவில் 1-ம் பிரதிவாதி மற்ற 3 முதல் 6,8,9 பிரதிவாதிகளுக்காகவும் இந்த அபிடவிட்டை தாக்கல் செய்கிறேன் என்றும், மேற்படி தாவா இன்று தங்களது தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தங்களது தரப்பில் வழக்கிற்கு பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பதிலுரையில் கூறியுள்ள ஆவணங்கள் தற்போது தன் கைக்கு கிடைத்துள்ளது என்றும், அந்த ஆவணங்கள் மேற்படி வழக்கிற்கு தேவையான முக்கியமான ஆவணங்கள் ஆகும் என்றும், ஆதலால் மேற்படி ஆவணங்களை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தங்களது தரப்பில் குறியீடு செய்தால்தான் தனக்கு தாவாவில் சரியான தீர்ப்பினை பெற இயலும் என்றும், இல்லாவிடில் தனக்கு பெருத்த கஷ்டநஷ்டம் பேரிழப்பும் ஏற்படும் என்றும், ஆகவே கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி தாவாவில் தனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்று குறியீடு செய்துகொள்ள தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுவது மிகவும் அவசியமும் நியாயமுமாய் உள்ளது என்றும் மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

**7.** எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், மனுதாரரின் மனு பொய், மோசம், சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, தள்ளுண்டு போகத்தக்கது என்றும், மனு அபிடவிட் சங்கதியில் மேற்படி தாவா இன்று மனுதாரர்கள்/1, 3 முதல் 6, 8, 9 பிரதிவாதிகள் தரப்பு



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.30 17:05:57 +0530

விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்பது உண்மை என்றும், மனுதாரர்கள்/1, 3 முதல் 6, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கிற்கு பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது உண்மை என்றும், பதிலுரையில் கூறியுள்ள ஆவணங்கள் தற்போது மனுதாரர்கள்/1, 3 முதல் 6, 8, 9 பிரதிவாதிகள் கைக்கு கிடைத்துள்ளது என்பது தவறு என்றும், அந்த ஆவணங்கள் மேற்படி வழக்கிற்கு தேவையான முக்கியமான ஆவணங்கள் ஆகும் என்பது தவறு என்றும், ஆதலால் மேற்படி ஆவணங்களை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து மனுதாரர்கள்/1, 3 முதல் 6, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்தால் தான் மனுதாரர்கள்/1, 3 முதல் 6, 8, 9 பிரதிவாதிகள் தாவாவில் சரியான தீர்ப்பினை பெற இயலும் என்பதும் இல்லாவிடில் மனுதாரர்கள்/1, 3 முதல் 6, 8, 9 பிரதிவாதிகளுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் பேரிழப்பும் ஏற்படும் என்பதும் தவறு என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்மனுதாரர்/வாதிக்கு உரிய பரிகாரம் கிடைக்ககூடாது என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களாகும் என்றும், மேற்படி ஆவணங்கள் குறித்து எதிர்மனுதாரர்/வாதி தாவாவில் குறிப்பிட்டுள்ளார் என்றும், மனுவில் கண்ட ஆவணங்கள் வழக்கிற்கு அவசியமில்லாத ஆவணங்கள் ஆகும் என்றும், எனவே மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றும், ஆகையால் கனம் கோர்ட்டார் அவர்கள் மேற்படி மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**8.** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது பாகப்பிரிவினை கோரியும், ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்ய கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை



R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.30 17:06:00 +0530

பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கானது மனுதாரர்கள்/1,3 முதல்6,8,9 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளபோது கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்து அதனை ஆவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/1,3 முதல்6,8,9 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணம் வழக்கிற்கு தொடர்புள்ளதாக இருக்கும்போது அந்த ஆவணத்தை பெற்று வழக்கில் ஆவணங்களாக குறியீடு செய்தால் மட்டுமே அந்த ஆவணங்கள் இந்த வழக்கிற்கு ஏற்புடையதா? இல்லையா? என்பதை முடிவு செய்ய முடியும். தற்போதைய நிலையிலேயே மனுவை நிராகரிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது. எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக**, மேற்படி தாவாவில் மனுதாரர்கள்/1,3 முதல்6,8,9 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஆவணங்களை ஏற்று குறியீடு செய்துகொள்ள இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.30 17:06:05 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

<u>**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u> : -

-- இல்லை -

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.30 17:06:08 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.